


## ஜீலை 10 - ஏழு சகோதரர்கள், புனித ரூபினா (2-ஆம் நூற்றாண்டு)

புனித பெலிசித்தாள் என்னும் பெண் உரோமையில் வசித்து வந்தாள். இவள் பக்தியுள்ள கிறிஸ்தவ விதவை. வாழ்நாளை நற்செயல்கள் செய்வதில் செலவழித்து வந்தாள். அவிசுவாசிகளை மனந்திருப்புவாள். கிறிஸ்தவர்களைத் திடப்படுத்துவாள். இதைக் கண்ட அஞ்ஞானக் குருக்கள் கடுங்கோபம் கொண்டார்கள். பேரரசனை அணுகி முறையிட்டார்கள். தாயும், மக்களும் அதிகாரியின் முன் கொண்டு வரப்பட்டார்கள். அரசன் போய் தேவர்களை கும்பிடும்படி கட்டளையிட்டான்.

அரசனின் ஆணைக்குக் கீழ்ப்படிய அவள் மறுத்தாள். அவளைக் கட்டி அடிக்கும்படி அதிகாரி உத்தரவிடடான். பிள்ளைகளும் தாயைப் போல உறுதியாக இருந்தார்கள். அவர்களைக் கட்டி அடித்தப்பின் சிறையில் வைக்கச் சொன்னான். வெவ்வேறு சாவுக்கு அவர்களை உள்ளாக்கினான்.

ரூபினா என்ற கன்னிப்பெண் ஒருத்தியிருந்தாள். அவளுடைய தங்கையின் பெயர் செக்குந்தா. இவளும் கன்னிகை, கற்பை இழப்பதை விட உயிரை இழக்க இருவரும் தயாராக இருந்தார்கள். வலேரியன், கலியேனுஸ் என்பவர்களது ஆட்சியில் இருவரும் உரோமையில் கொல்லப்பட்டார்கள்.

**சிந்தனை:** மனச்சாட்சியின் குரலை மதிப்போமாக துன்பப்பட வேண்டியிருந்தாலும் அக்குரலுக்குக் கீழ்ப்படிய பின் வாங்கக் கூடாது.

**செபம்:** ஆண்டவரே, உயிரை விட உம்மை அதிகமாக நேசிக்கும் வரத்தை எங்களுக்குத் தாரும்.